

திருகோணமலையை பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட

# அமரர். இராசமணி தில்லை நடராஜா

அவர்களின்

# 31ம் நினைவு மலர்

29.09.2011

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

அன்னை பூமியாம்
திருகோணமலையில்
அவதரித்து இம்மண்ணிலே
பணிபுரிந்து ஆயகலைகள்
ஆனவரைபுகட்டி தாளாத மனவுறுதி
பண்பும் கொண்டு நாம் வாழ, இன்று
வானுறையும் தெய்வமாகிவிட்ட
பாசத்திருவாம் எம் அன்னைக்கு அன்புக்
காணிக்கையாக இம்மலர். உங்கள்
ஆத்மசாந்திக்கு எங்கள் மௌன
அஞ்சலியை பாமாலையாக சூட்டி
பணிகின்றோம் இங்கு.

- குடும்பத்தினர் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அமரர்.இராசமணி தில்லைநடராஜா
# அவர்களின்
# நினைவுமலர்

மண்ணகத்தில்
08.08.1924

விண்ணகத்தில்
30.08.2011

## திதிவெண்பா

கரவருடம் ஆவணி முப்பதில்
வருநாளாம் துதிகையிலே
உத்தமியாம் இராசமணி
உற்றவரும் கலங்க
ஈசனடி சேர்ந்தார் இனிதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பஞ்சபுராணம்



## விநாயகர் துதி

திருச்சிற்றம்பலம்

ஐந்துகரத்தனை ஆனைமுகத்தனை
இந்தின் இளம்பிறை போலுமெயிற்றினை
நந்தி மகன்றனை ஞானக்கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே

## தேவாரம்

மானினேர் விழி மாதராய் வழ
திக்குமா பெருந்தேவிகேள்
பானல்வாயொரு பாலன் ஈங்கிவன்
னென்று நீ பரிவெய்திடேல்
ஆனைமாமலை யாதியாய
இடங்களில் பல அல்லல்சேர்
ஈனர்கட்கெளி யேனலேன் திரு
ஆலவாய் அரன் நிற்கவே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிறைவெண் கொடிமாட நெற்றிநேர் தீண்ட
பிறைவெண் திறைதாக்கும் பேரம் பலம்தில்லை
சிறைவண் டறையோவா சிற்றம்பலமேய
இறைவன் கழல் ஏத்தும் இன்பம் இன்பமே

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக்காவுளான்
சடையும் பிறையும் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையும் கொண்ட வுருவமென் கோலோ

## திருவாசகம்

பாரொடு விண்ணாய் பரந்தளம் பரனே
பற்றுநான் மற்றிலேன் கண்டாய்
சீரொடு பொலிவாய் சிவபுரத்தரசே
திருப்பெருந் துறையுறை சிவனே
யாரொடு நோகேன் யார்கெடுத்துரைக்கேன்
ஆண்டநீ அருளிலையானால்
வார்கடல் உலகில் வாழ்கிலேன் கண்டாய்
வருகவென்றருள் புரியாயே

பால்நினைந்தூட்டும் தாயினும் சாலப்
பரிந்து நீ பாவியேனுடைய
ஊனினை உருக்கி யுள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச் சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெருமானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப்பிடித்தேன்
எங்கெழுந் தருளுவதினியே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவிசைப்பா

நையாத மனதினனை
நைவிப்பான் இத்தெருவே
ஐயா நீ உலாப்போந்த
அன்றுமுதல் இன்றுவரை
கையாரத் தொழுதருவி
கண்ணாரச் சொரிந்தாலும்
செய்யாயோ அருள்கோடை
திரைலோக்கிய சுந்தரனே

கற்றவர் விழுங்கும் கற்பகக்கனியை
கரையிலா கருணை மாகடலை
மற்றவர் அறியா மாணிக்கமலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎஞ்சிவனை
திருவீழி மிழலை வீற்றிருந்த
கொற்றவன் தன்னை கண்டுகண்டுள்ளம்
குளிர என்கண் குளிர்ந்தனரே

# திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச்
சிவலோக நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவு பெற்றேன்
பெற்றதார் பெறுவாருலகில்
ஊரும் உலகுங் கழற
உழறி உமைமணவாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும்
பரிசுநாம் பல்லாண்டு கூறுதுமே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலுக்குப் பாலகன் வேண்டிஅழுதிடப்
பாற்கடல் ஈந்தபிரான்
மாலுக்குச் சக்கரம் அன்றருள் செய்தவன்
மன்னிய தில்லை தன்னுள்
ஆலிக்கும் அந்தணர் வாழ்கின்ற
சிற்றம் பலமே இடமாகப்
பாலித்து நட்டம் பயிலவல்லானுக்கே
பல்லாண்டு கூறுதுமே

# பெரிய புராணம்

சிவனடியே சிந்திக்குந்
திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யருமாற்றுக
பாங்கினில் ஓங்கியஞானம்
உவமையிலாஜ் கலைஞானம்
உணர்வறிய மெய்ஞ்ஞானம்
தவமுதல் வர் சம்பந்தர்
தாமுணர்ந்தா ஏந்நிலையில்

வேதநெறி தழைந்தோங்க
மிகுசைவத் துவைவிளங்க
புதபரம் பரைப்பபொலிய
புனத வாய் மலர்ந்தழத
சீதவள வயல் புகலித்
திருஞான சம்பந்தர்
பாதமலர் தனைக் கொண்டு
திருத்தொண்டு பரஷவாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருப்புகழ்

மாதவசமாயிற் றுழல்வாரும்
மாதவமெனாமல் திரிவாரும்
தீதகலவோதி பணியாரும்
தீ நரகமீதிற் றகழ்வாரே
நாதவொளியே நற்குணசீலா
நாரியிருவோரைப் புணர்வேலா
சோதிசிவஞானக் குமரேசா
தோமில் கதிர்காமப் பெருமாளே

ஏறுமயிலேறி விளையாடு முகமொன்றே
ஈசனுடன் ஞானமொழி பேசுமுகமொன்றே
கூறுமடியார்கள் வினைதீர்த்தமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுகமொன்றே
மாறுபடு சூரனை வதைத்த முகமொன்றே
வள்ளியை மணம்புரிய வந்தமுகமொன்றே
ஆறுமுகமானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதியருளாசனமமர்ந்த பெருமாளே.

# வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசுசெய்க குறைவிலாது உயிர்கள் வாழ
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் இராசமணி தில்லைநடராஜா
அவர்களின்
# வாழ்க்கை வசந்தம்

பாடல்பெற்ற தலங்களுள் ஒன்றான குற்றமிலாதார் குரைகடல் சூழ்ந்த திருக்கோணேஸ்வரம் அமைந்திருக்கும் பூமியிலே இராசையா தங்கப்பொண்ணு தம்பதியினருக:கு 1924ம் ஆண்டு ஆவணித்திங்கள் 8ம்நாள் செல்வப் புத்திரியாக அவதரித்தவரே அமரர் இராசமணி

அவர் தனது இளமைக்கல்வியை தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியிலே கற்று கணிதத்திலும் தமிழிலும் சிறந்து விளங்கினார்.

கார்த்திகேசனின் வக்கி வண்டியில் செல்லப்பிள்ளையாய் ஏறியே பாடசாலைக்குச் சென்று வந்தார். கல்வியில் மட்டுமல்லாது நாட்டியம், நாடகம், பேச்சு போன்றவற்றில் பங்குபற்றி பாராட்டையும் பெற்றார்.

1947இல் தான்கற்ற கல்வியின் பேறாக ஆசிரிய பயிற்சிக்கல்லூரியில் ஆரம்பித்து தி/ஸ்ரீசண்முகா இந்துமகளிர் கல்லூரியில் தனது ஆசிரியர் பணியை தொடர்ந்தார்.

1963இல் தி/மெதடிஸ்த பெண்கள் கல்லூரியல் தன் பணியை தொடர்ந்து பின் மீண்டும் தி/ஸ்ரீ சண்முகா இந்து மகளிர் கல்லூரியில் தன் கடமையை ஆற்றினார்.

1956இல் நற்குடிமகனான தில்லைநடராஜா என்பவரைக் கரம்பற்றினார். இவ் இனிய இல்லறப் பூங்காவில் சிவாஜினி, நளாயினி எனும் இரு குழந்தைகள் இவர் மடியில் தவழ்ந்தனர்.

அவர்களைத் தாலாட்டி சீராட்டி வளர்த்து கல்வியில் சிறக்கவைத்து முறையே கோணலிங்கம், கேதீஸ்வரன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்பவர்களின் கரம்பற்றி வைத்து ஆனந்தத்தில் மூழ்கியதுடன் ஹிஷோபன், ஜனுஷாந்த் எனும் பேரக்குழந்தைகளைக் கண்டு மனதைப் பறிகொடுத்து மகிழ்ந்தார்.

அன்னாருடைய உடன்பிறவாத சகோதரிகள் தேவகி(ராணி), புஸ்பாஞ்சலிதேவி(மலர்) என்போருடன் சொந்தச் சகோதரிகள் போல பாசத்தைக்காட்டி மகிழ்ந்திருந்த வேளையில் ராணி குமாரதாஸ் என்பவரையும், மலர் கமலதாஸ் என்பவரையும் மணவாளனாகக் கொண்டனர். இம் மகிழ்ச்சியில் மூழ்கியிருந்த அன்னார் ராணியின் குழந்தைகளான பிறேம், டேவ், ராஜ், சூரியா, பிரியா என்போரினதும் மலரின் குழந்தைகளான சிவகலா, உதயகலா, தேவன், மதன், நீதன் என்போரின் வாஞ்சையான பெரியம்மா என்ற வார்த்தையில் இரட்டிப்பு மகிழ்ச்சியடைந்தார்.

அவர்களின் வழித்தோன்றலாக அருகே உள்ள தனுவிந்தா, கௌசிகா வும் அம்மாச்சி, அம்மாச்சி என்றழைத்து அவரை மகிழ்வித்து அவரின் பாசத்திற்கு ஆளாகினர்.

இவர்கள் மட்டுமல்ல இவரது குழந்தைகள் அன்னார் வளர்த்த பிள்ளைகள் அக்காச்சி, அக்காச்சி என்றழைத்து நித்தமும் அவரைப் பார்க்கவரும் புவனேஸ்வரி, மற்றும் கோணாமலையும் அன்னாரின் செல்லக்குழந்தைகளான காலஞ்சென்ற சரோஜினி(ரஞ்சி), கமலா, கிருஸ்ணதாஸ், கமலநாதன், கோமதி, மதிவதனி, ஜெயசாந்தி, ஜெயபவானி, அருள், செந்தில், ஜனனி மற்றும் பெரியம்மா, பெரியம்மா என்றழைக்கும் கிருபாளினி, தயாளினி இவர்கள் எல்லாம் இவருடைய பாசங்களிற்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கட்டுப்பட்டவர்கள். தன் தாயின் உருவை அன்னாரின் முகத்தில் கண்டு மாமி, மாமி என்று அவரிடம் வளர்ந்தவர் விஜயலட்சுமி. அத்துடன் திருகோணமலையைக் காட்டித் தந்தவர் எங்கள் அக்காச்சி என்று வாயாரக் கூறும் சண்முகம் மூளாய் இவர்களையும் தன் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்தார் அன்னார். அதுமட்டுமல்ல மச்சாள் அன்று அன்புடன் அழைக்கும் வள்ளி நாயகியையும் மாமி என்று அழைக்கும் பாலசிரோமணியும் அடிக்கடி நேசத்துடன் விசாரிப்பார் அன்னார்.

அன்னாரின் மருமக்கள் கோணலிங்கம், கேதீஸ்வரன் என்றிருக்க அவரிற்கு கடமைசெய்த சீலன், ஸ்ரீலோகேஸ்வரன், பாலா என்ற மருமக்கள் எல்லாம் தன்னுடைய பிள்ளைகள் தான் என்று மனம்விட்டு கூறுவார்.

அதுமட்டுமல்லாமல் அவரது பேரக்குழந்தைகளான கிஷோபன், ஜனுஷாந்த், தனுவிந்தா மற்றும் கௌசிகா இவர்களுடைய ஒவ்வொரு வளர்ச்சியையும் ஆர்வத்தோடு எதிர்பார்த்து அவர்களை வெற்றியின் பாதையில் வழிநடத்தினார். வெளிநாடுகளில் வசிக்கும் உடன்பிறவாச் சகோதரிகளின் குழந்தைகளையும் அன்போடும் பாசத்தோடும் விசாரித்துக் கொண்டே இருப்பார்.

இவ்வாறு நற்குடியில் பிறந்து நல்லாசிரியராய் வாழ்ந்து நல்ல உடன்பிறவாச் சகோதரிகளை நல்ல மக்களை, நல்ல மருக்களை, நல்ல பேரக்குழந்தைகளை பெற்று அவர்களது அன்பினைப் பெற்று அனைவரது நெஞ்சமும் கலங்க ஈசனடிசேர்ந்தார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்கள் இரங்கல்

எமது அன்புத்தெய்வமே நீங்கள் எங்களை விட்டுச் சென்ற நாட்களை எம்மால் மறக்கமுடியாதம்மா. வறுமையிலும் செம்மையாய் வாழவேண்டும் என்று கூறி வளர்த்தீர்கள்.

பள்ளிக்குச் செல்கையில் நீங்கள் சொன்ன புத்திகள் எங்கள் வாழ்க்கைப் பாதையை சீரிய வழியில் இட்டுச்சென்றன. எத்தனை இடர் வந்தாலும் அமைதியாக இருப்பீர்களே அம்மா.

இதுவரையில் உங்கள் பார்வையில் எல்லோரும் நல்லவர்கள் உங்களுக்கு யார்மீதும் குற்றம் சொல்லத்தெரியாதே! நீங்கள் ஒரு தெய்வப்பிறவியன்றோ. அதனால் தானே அம்மா உங்களுக்கு செய்யும் பணிவிடைகளே எங்களுக்குப் போதும் கோயில்கள் தேவை இல்லை என்றிருந்தோம்.

நீங்கள் காட்டிய வழிதானே அம்மா எங்களை மன அமைதியுடன் வாழ வழிகாட்டியது.

இத்தனை வயது வந்தாலும் எங்கள் ஒவ்வொரு செயற்பாட்டையும் அவதானிப்பீர்களே அம்மா. நீங்கள் அடிக்கடி கூறுவீர்களே நான் இறந்தாலும் நான் வளர்த்தவர்களை என்றென்றும் நினைக்க வேண்டும் என்று, அதுதான் அம்மா உங்கள் ஆசை நிறைவேற கல்வெட்டில் அவர்கள் பெயர்களை எல்லாம் பொறித்துள்ளோம்.

அம்மா உங்களை எங்களால் பிரியமுடியாதுதான் இருந்தாலும் என்றாவது ஒருநாள் நீங்கள் எங்களை விட்டு பிரியத்தானே வேண்டும் என்று எமது மனதைத் தேற்றிக்கொண்டு உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

**சிவாகினி**

**நளாயினி (பிள்ளைகள்)**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரக்குழந்தைகள் இரங்கல்

எங்களது ஆசை அம்மம்மா நாங்கள் உங்களை அம்மாச்சி அம்மாச்சி என்று ஆசையுடன் அழைக்கும் நாட்கள் இனியும் வராதே.

உங்களால் இனிப்பேச முடியாது என்று எங்களிடம் கூறியதும் நாங்கள் அடைந்த வேதனை உங்களுக்கு தெரியாது அம்மாச்சி உங்களுக்கு தெரியாமல் இருப்பதும் நன்மைக்கே.

நாங்கள் வேதனைப்பட்டால் நீங்கள் தாங்கமாட்டீர்களே அம்மாச்சி. அம்மாச்சி நாங்கள் நல்ல கல்விகற்று, உயற்சி அடைய நீங்கள் தெய்வமாக இருந்து எங்களை ஆசீர்வதியுங்கள். நாங்கள் உங்கள் ஆத்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஹிஷோபன்
ஜனுஷாந்த்

## முதற்கண்ட பேரக்குழந்தைகள் இரங்கல்

எம்கையெழுத்தில்....
முதல்முதலாக எம்கையெழுத்தில்
உமக்கென்று ஒரு மடல் எழுதுவதில்
எம்முள்ளம் மகிழ்வடைகின்றது...
ஆனால்
எம் கைகள் காகிதத்தைத் தொடுமுன்
எம் கண்ணீர் துளிகள் அதனை நனைக்கிறது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உம் மடிமீது நாம்அமர எம் கை பிடித்து
நீங்கள் இட்ட முதல் கிறுக்கல் அதனைக் கொண்டு
உமக்கென காவியம் ஒன்றைப்படைக்க
இந்த மடலை பெருமையுடன் வரைகின்றோம்.
ஏனோ தெரியவில்லை எம் கைகள் நடுங்குகின்றன
எப்போதும் எம்மைப் பற்றி சிந்தித்த
உம்மைப் பற்றி சிந்திக்க ஏனோ
எம் சிந்தனை மறுக்கின்றது
கண்ணீரில் கண்கள் நீச்சலடிக்க
நாங்கள் உம்மை இறுதியாகக் கண்ட
காட்சி மட்டும் எம்முள்
அலைமோதிக் கொண்டு இருக்கின்றது
நினைவுகளாக... நிஜங்களாக...
வாழ்ந்த காலங்களில்
ஆயிரம் ஆயிரம் அனுபவங்களை கண்ட உம்மை
பிரிந்து இருப்பது அரிதல்லவே
அன்பின் வலிமையும் பிரிவின் கொடுமையும்
ஒன்றாக உணர்ந்தோம் தனிமையில் இன்று...
நினைவில் என்றும் கலந்திருப்பீர் என்ற நம்பிக்கையில்
எம்மடலுக்கு முற்றுப்புள்ளி இடுகின்றோம் எம் கண்ணீரால்

த.தனுவிந்தா
த.கௌசிகா
(சீலன் குடும்பம்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிருஸ்ணதாஸ் [பெரியதம்பி] இரங்கல்

எனது பாசத் தாயே அக்காச்சி நான் பிறந்தபோது உங்கள் கைகள் தான் என்னை ஏந்தியது. ஏந்திய என்னை அன்றுமுதல் நீங்கள் கைவிடவில்லையே. உங்கள் பிள்ளைபோல் ஏற்றுக் கொண்டீர்களே.

உங்கள் இரு பிள்ளைகளுடன் என்னையும் பாசமாய் வளர்த்து பெரியதம்பி என்று என்னைச் செல்லமாக அழைப்பீர்களே சொந்தப் பிள்ளையைப்போல் என்னை நீங்கள் பத்திரமாக பார்த்த விதத்தை இன்றும் நினைத்துப் பார்க்கின்றேன். உங்களைப்போல் ஒரு தெய்வத் தாயை நான் கண்டதில்லை அக்காச்சி.

யாருடைய மனமும் நோக நடந்ததில்லையே அம்மா. அப்படியொரு அக்காச்சியை நான் பார்த்ததில்லை. உங்களுக்கு சொந்தப்பிள்ளைகள் இருவர் ஆனால் நீங்கள் வளர்த்த பிள்ளைகள் ஏராளம். எல்லோரும் உங்களை நினைத்து கண்ணீர் வடிக்கிறார்கள். கடைசி நேரத்தில் நீங்கள் என்னைத்தானே கேட்டீர்கள். என்ன சொல்ல நினைத்தீர்களோ சொல்லாமல் போய்விட்டீர்களே. நான்கு மாதங்களிற்கு முன் நானும் என் பிள்ளையும் உங்களைப் பார்த்துவிட்டு லண்டன் சென்றோம். அதுவே எனக்கு மன நிம்மதியைத் தருகின்றது அக்காச்சி.

ஒரு தெய்வம் இன்னொரு தெய்வத்திடம் சென்றுவிட்டதாக நான் நினைக்கின்றேன். நீங்கள் தெய்வமாக இருந்து எங்களுக்கு ஆசீர்வதிப்பீர்கள் எனக்கூறி உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றேன்.

பெறாமகன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருமக்கள்

பாசத்தின் பிறப்பிடமே அன்பு மாமியே நீங்கள் மாமியல்ல எங்களுக்கு ஒரு தாய். நாங்கள் உங்கள் பிள்ளைகளைக் கரம்பிடித்த அன்றே உங்களை எங்கள் தாய் வடிவத்தில் கண்டோம்.

மதியம் 2 மணியானவுடன் கோணலிங்கம் எங்கே? கேதீஸ் எங்கே? பிள்ளைகள் எங்கே? என்று தேடுவீர்களே. எங்கள் வதனம் கண்டபின்னர் தானே நீங்கள் அமைதியடைவீர்கள்.

ஒரு நிமிடம் எங்களைக் காணாவிடின் உங்கள் பிள்ளைகளிடம் ஆயிரம் கேள்வி கேட்பீர்களே, அத்தொனியும் கம்பீரப் பேச்சும் இனி எங்கள் வீட்டில் கேட்காது மாமி.

ஆனால் நீங்கள் தெய்வமாக இருந்து எங்களை ஆசீர்வதியுங்கள். உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

கோணலிங்கம்
கேதீஸ்வரன்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரிவுபசாரமே வைரவிழாவாக மலர்ந்தது

1947-1984 வரை கடந்த 37 வருடங்களாக ஸ்ரீ சண்முக வித்தியாலயத்தில் நல்லாசானாய், நன்மந்திரியாய் பண்பிலே தெய்வமாக ஆசிரியர் பணிபுரிந்த திருமதி.இராசமணி தில்லைநடராஜா அவர்கள் 1984-08-08 அகவை அறுபதை எய்தியமையால் பிரிவுபசாரமே வைரவிழாவாக, ஸ்ரீ சண்முக வித்தியாலய அதிபர், ஆசிரியர்களால் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

அந்நிகழ்வின்போது எடுத்த இரண்டு புகைப்படங்களே கீழே காணப்படுபவை.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எந்தனுக்கும் வேதனை இதயம் ஏறியதே**

பண்டுபுகழ் பெருமை கொண்ட திருகோணமலையில்
தண்டமிழும் சைவமும் தழைத்தினி தோங்கும்
சண்முக வித்தியாலயத்தில் நற்றமிழ் ஆசிரியையாக
வண்ணத்தமிழ் பெண் ஒருத்தி வந்தனள்
கண்டவர் மயங்கும் கவினுறு கோலம்
திண்ணிய நெஞ்சம் தெளிந்த நல்லறிவுடன்
மண்ணில் தங்கம்மாவின் பள்ளியும் மாண்புற
நண்ணிய நங்கை பெயர் இராசமணி
அன்று நான்கண்ட தமிழாசிரியை அவரே
நன்றே தமிழொடு சைவமுங் கற்பித்தார்
என்றும் இனிக்கும் அவர்இலக்கிய பாடம்
துன்று பவத்துயர் போக்கும் திருமுறைஓதுதல்
சந்தமுடன் பாட்டெழுதி தகுந்தபடி நடனங்கள்
கந்துகமா காவடியா கரகமா கோலாட்டமா
வந்த கலைவிழாக்கள் சிறக்க ஆசிரியை
தந்தனர் தங்கம்மாவும் கண்டுகளி கூர்ந்தனர்
வென்று வந்தன அவருடைய நாடகங்கள்
சென்ற இடத்தில் ஸ்ரீசண்முகா வெற்றியீட்டி
பொன்றாப் புகழ்பெற மாணவரை உருவாக்கிய
இன்றிலிட்ட தீபமே எங்கள் குருமணியே
உந்துசக்தி ஆகச்சிறாரை ஊக்குவித்து நானும்
முந்துகலை பயிற்றிய முத்தமிழ் வித்தகியவர்
செந்தமிழ் சிறக்க தானும் மாணவருடன்
பந்தமுடன் இணைந்து பங்கேற்பார் நிகழ்வுகளில்
சிந்தைநிறை மகிழ்வோடு செப்புவார் 'தங்கச்சி' என
சொந்தமுடன் அரவணைக்கும் செந்தமிட் செல்வியவர்
வந்தவேளையிலும் இடித்துரைக்கும் நன்மந்திரி பெருந்தகை
தந்ததுயர் மறந்து பிறர்துயர் போக்குவார்
வந்தவேலை முடிந்தது இனிப்புறப்படலாமெனவெண்ணி
அந்தத்தலைவன் தில்லைநடராஜன் அடியினை சேருதற்கு
உந்தன் மனம்நாடியதோ உயிர் ஏகியதோ
எந்தனுக்கு வேதனை இதயம் ஏறியதே

மாணவி
மணிமேகலாதேவி கார்த்திகேசு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விஞ்ஞானம் என்பது மேலான அறிவு எனலாம். (வி+நாயகன்) (வி+ஞானம்). இன்றைய 21ம் நூற்றாண்டில் மிகவும் வளர்ச்சி அடைந்த துறை என்றால் அது விஞ்ஞானத்துறை என்பதே உண்மை. ஆயினும், தஞ்சைக் கோபுரநிழலும், நிலாவரைக் கேணியின் ஆழமும் விஞ்ஞான ஆய்வில் அகப்படாத பெரிய விஞ்ஞான சாதனையாகவே இன்றும் எம்மிடையே காணப்படுகிறது. இந்துமதத்தின் பிரமாண நூல் வேதம். வேதம் என்றால் அறிவு எனப்பொருள்படும்.

வேதங்கள் அறிவே மதம் என்று வலியுறுத்துகின்றன. இவ்வாறான ஞானத்தை உயிர்கள் தோன்றிய காலம் முதல் பரிணாம வளர்ச்சியில் (Evolution) விஞ்ஞானத் தெளிவும், மனித சிந்தனைகளும் மாறிக்கொண்டே இருக்கின்றன. உதாரணமாக 1960ம் ஆண்டு வரை பிரிக்க முடியாத பிளக்க முடியாத பொருளெனத் தெரிந்த அணுவை (Atom) விஞ்ஞானம் இன்று பிளந்து அளப்பரிய ஆக்க, அழிவுச்சக்தியைப் பெற்றுக் கொண்டுள்ளது. இயற்கையின் இயக்கம் முழுவதும் ஆண்சக்தி பெண்சக்தி எனும் இரண்டின் தொழிற்பாடுதான் என்பதை அணு ஆராய்ச்சி மூலம் விஞ்ஞானம் வெளிப்படுத்தியுள்ளது. எலக்ட்ரன் (Electron) ஆண் எனவும் நியூட்ரன் (Neutron) பெண் எனவும் கொள்ளப்படும். இரண்டும் செம்மையும் நீலமும் கொண்டவை. இரண்டும் இணைந்தால் பெறப்படுவதுதான் மாபெரும் சக்தி. மேல்கீழ் வட்டமாகச் சுற்றும் நியூட்ரன் கிடைப்பாங்காகச் சுற்றும் புறோத்திரன் ஆகிய சக்தி முதல் காணப்படும் இடம் சதாசிவ திருமேனி எனும் சிவலிங்கவடிவாகும். இதனைச் சைவசித்தாந்தமும், "சதா சம்யோக பாவத்துவாத் சக்தி உத்கரகாரிணம்" எனக் கூறும் என்றோ பெறப்பட்ட மெய்ஞ்ஞானக்கூற்று இன்று விஞ்ஞானத்தால்

நிரூபிக்கப்பட்டுள்ளது. இதுவொன்றே இந்துமதம் எத்தகைய மாற்றங்கள் வந்தாலும் வளைந்து கொடுத்து நிமிர்ந்து நிற்கும் பெருமையுடையது என கூறுவதற்கு போதுமான காரணம் எனக்கூறலாம்.

அண்டவெளியில் தீக்கோளாக அமைந்துள்ள சூரியனைப் பல கோள்கள் (கிரஹங்கள்) சுற்றி வருகின்றன. இவற்றிடையே உண்டாகும் தட்பவெப்ப மாறுதல்களாலும், பிராணவாயுச் சேர்க்கையாலும் உண்டான ஓர் மண்பிண்டமே பூமியாயிற்று. இது புவித்தோற்றம் பற்றிய விஞ்ஞானத் தெளிவாகும். இப்படியான நீர், நிலம், தீ, காற்று, வெளி எனும், பூதபேத செயல்களின் தத்துவமே அண்டம் என்றும், பிரம்மம் என்றும் இந்துமதம் பெயரிட்டது. உருவகத்தில் பிரம்மன் ஆக்கச்சக்தியாக(creature) படைத்தல் தொழில் செய்பவராக கூறப்படுகின்றார். இவ்வாறாக படைக்கப்பட்ட அண்டத்தில் புல், பூண்டு முதல் மனிதன் ஈறாக உயிரினங்கள் தோன்றி பிண்டம் என வழங்கலாயிற்று. இவற்றின் வளர்ச்சியும் செயற்பாடுகளும் காத்தல் என்றும் (operation) (அதனை சர்வம் விஷ்ணுமயம்) காத்தல் தெய்வமாக விஷ்ணுவும் போற்றப்பட்டார். இப்பிண்டத்தில் ஜீவன்களை உண்டுபண்ணி வளர்த்து, பரிணாம வளர்ச்சியில் ஜீவன் என இந்து மதம் கூறும், இதனை மேலைநாடுகள் வர்ணித்து

Generation - படைத்தல் - பிரம்மா

Operation - காத்தல் - விஷ்ணு

Distruction - அழித்தல் - சிவம்(உருத்திரன்)

மும்மூர்த்திகள்

G.O.D - GOD "காட்" கடவுள் எனும் பொதுப் பெயரால் அழைத்தார்கள். இதிகாச புராணங்களில் வரும் கதைகளில் கூட விஞ்ஞானத் தொடர்பு உள்ளதை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நாம் அறியமுடியும். "சார்ள்ஸ்மாவின்" எனும் மேலைத்தேய ஆய்வாளன் பரிணாம வளர்ச்சியைப் பற்றி எடுத்தாண்ட கொள்கையுடன் ஸ்ரீவிஷ்ணுவின் தசாவதாரத்தை வரிசைப்படுத்திக் கூறமுடியும். டார்வின்(Darvin) கூற்றுப் படி முதல் உயிரினம் நீரில் தோன்றிய "அமீபா" படிப்படியாக வளர்ந்து மனிதராகியது போல் முதல் அவதாரமாக மச்சவதாரம் (மீன்) ஆமை, பன்றி, குள்ளவடிவான வாமனர், நரசிம்மம், என்ற வகையில் சொல்வதைக் காணலாம்.

இந்து மதம் "நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளர்ந்த மறைமொழி மந்திரம்" என்று வரைவிலக்கணம் தருகிறது. இம்மறைமொழி உள்ளத்தை இறைவன் பால் இசைவிக்கும் என்றும் வேண்டியதைத் தரும் என்றும் கூறுவர். இன்றைய மனித உளவியல் மனோவசிய விஞ்ஞானிகளும் இதனை ஏற்றுள்ளனர். குறித்த இவ்விடயத்தில் எம்முடைய சொல், செயல், நினைவு மூன்றும் ஒருமித்துத் தொடர்ச்சியாக ஈடுபடும் பொழுது நாம் அதில் லயித்து விடுகின்றோம். அவ்விடயம் சம்பந்தமான காரியங்களை ஆற்ற எமக்குப் பிறக்கும் புதிய மனோபலமே காரியத்தின் வெற்றியை பெரும்பாலும் தீர்மானிக்கும் எனக் கூறுவர். இதனால் இந்துமதம் பூசைவழிபாடு, விக்கிரகவழிபாடு என்பவற்றிற்கு முக்கியத்துவம் கொடுப்பதற்கான காரணம் புலனாகின்றது.

இன்றைய ஆய்வாளர்களின் சிந்தனையில் தெளிவைத்தந்த இரண்டு இந்துமத செயற்பாட்டினையும் சிறிது ஆய்வது சாலவும் பொருந்தும். நாம் தினமும் அணியும் திருநீறு அதியுயர்ந்த பூச்சிகொல்லி என்பதும், நமது காலை மாலை சூரிய வழிபாடு கண்ணுக்குப் பலத்தையும் உடலுக்கு விற்றமின் D என்னும் தாதுவையும் ஊட்டுகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிந்திக்க வைக்கும் புதிர் கணக்குகள்

## 1. வட்டி வடிவேலு

திரு.கணக்கர் வீட்டில் தோட்ட வேலை செய்யும் மாடசாமி, "ஐயா, ஒரு ஆயிரம் ரூபா கடன் வேணும். கொஞ்சம் கொஞ்சமா சம்பளத்திலே கழிச்சுடுறேன்." என்றான்.

"என்ன அவரசம்? கடன் திடீரென்று" கேட்டார் கணக்கர்.

மாடசாமி தன் தலையை சொறிந்து கொண்டே, "ஐயா போனவருடம் பொங்கலுக்கு மகள், மருமகனெல்லாம் வந்தாங்க: வட்டி வடிவேலுவிடம் என் வீட்டுக்காரி நகையை வச்சி ரூ1000 கடன் வாங்கினேன். 10மாதம் ஆகிறது நான் என்னிடமிருந்த பணத்தைக் கொண்டு திருப்பப் போனேன். வட்டியும் சேர்த்து ரூ2000 ஆகிறது என்று சொல்லுகிறார்." என்றான்.

"அட மாடசாமி, அப்போ என்னிடத்திலே சொல்லியிருந்தா ரூ1000 தந்திருக்க மாட்டேனா! இருந்திருந்து வட்டி வடிவேலுவிடமா வாங்கினாய்? அவனிடம் வட்டியும் குட்டி போடுமே!" என்று இரைந்த கணக்கர், ரூ1000த்தை கொண்டுவந்து கொடுத்து, "உடன் நகையை திருப்பிக் கொண்டு வா" என்றார்.

நடந்த உரையாடலைக் கேட்டுக் கொண்டிருந்த கணக்கரின் பேரன் தமிழ்ச்செல்வம் கணக்குப் பார்த்து, "தாத்தா, கொள்ளை வட்டி வாங்குகிறான் அந்த ஆளு." என்றார்.

உங்களுக்கு தெரிகிறதா? வட்டி வடிவேலுவிடம் ரூ100க்கு ஆண்டுக்கு வட்டி என்ன?



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 2. ஆசிரியை பிறந்தநாள்

பள்ளிக்கூடம் முடிந்து வந்தான் தமிழ்ச்செழியன்.

"தாத்தா, எங்கள் ஆசிரியைக்கு பிறந்தநாள். மாணவர்கள் அனைவருக்கும் சாக்லேட் வாங்கித் தந்தார்கள்" என்று வழக்கம்போல் பள்ளிக் கதையை தொடங்கினான்.

"அதனால் என்ன, நீயும் தான் உன் பிறந்த நாளுக்கு எல்லோருக்கும் சாக்லேட் கொடுப்பாய்..."

"தாத்தா, எங்க ஆசிரியை 100 சாக்லேட்கள் வாங்கிட்டு வந்திருந்தாங்க. மொத்தம் வகுப்பிலே 36 மாணவ, மாணவிகள் உள்ளோம். எனக்கு முதலில் 2 சாக்லேட்டுகளை கொடுத்துவிட்டு, மீதியை மற்ற மாணவர்களுக்கு ஆளுக்கு இரண்டும் மாணவிகளுக்கு, ஆளுக்கு நான்கும் கொடுக்கச் சொன்னாங்க. நான் கொடுத்தேன். 100 சாக்லேட்டுகளும் சரியாகப் போச்சு" என்றான் தமிழ்செழியன்.

"ஏண்டா, பையன்களுக்கு இரண்டு, பெண்களுக்கு நான்கு?" கேட்டார் கணக்கர்.

எங்க ஆசிரியைக்கு மாணவிகள் தான் பிடிக்கும் அமைதியா இருப்பாங்க. பையன்கள் குறும்பு பண்ணுவாங்க. பிடிக்காது."

"சரி உன் வகுப்பிலே எத்தனை பையன்கள், எத்தனை பெண்கள் படிக்கிறாங்க நான் சொல்லட்டுமா?" கேட்டார் தாத்தா.

"சொல்லுக்க பார்ப்போம்" சிரித்தான் செழியன். தாத்தா கணக்கு பார்த்து சொல்லிவிட்டார். நீங்களும் கண்டு பிடிக்கலாமே!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 3. அரசு அலுவலகம்

திரு.கணக்கர் மத்திய அரசு அலுவலகம் ஒன்றில் கண்காணிப்பாளராக பணிபுரியும் நண்பர் ஒருவரைப் பார்க்கச் சென்றார்.

"வேலை எல்லாம் எப்படி நடக்குது?" விசாரித்தார் கணக்கர்.

"அதையேன் கேட்கிறீங்க? காலம் கெட்டுப்போச்சு. ஒருவரும் சொன்னபடி கேட்பதில்லை. அலுவலகத்திலிருப்பது கூட கிடையாது. அதிகாரிகள் வந்தால் நாம்தான் வாங்கிக் கட்ட வேண்டியிருக்கு..." அலுத்துக் கொண்டார் நண்பர்.

"மாநில அரச அலவலகங்கள் தான் மோசமா இருக்குனு நினைத்தேன். மத்திய அரசு அலுவலகமும் அப்படித்தானிருக்கு" கணக்கர் இசைந்து பேசினார்.

"கேளுங்க, நேற்று திங்கட்கிழமை அலுவலகம் தொடங்கி 1மணி நேரம் கூட ஆகல்ல, 10.40க்கு கோட்ட மேலாளர் அலுவலகத்துக்கு வந்து வருகை ஏட்டைப் பார்த்தார். 75மூ பேர் வந்திருந்தார்கள். 25மூ பேர் அவரச விடுப்பு.

வந்திருந்தவர்களில் பாதிப்பேர் தான் இருக்கையில் இருந்தனர். மீதி பேர் தேநீர் விடுதியில் அரட்டை. மேலாளர் வந்ததும் 25பேர் விடுதியிலிருந்து திரும்பி அலுவலகத்துக்குள் வந்து அமர்ந்தனர். அலுவலகத்திலிருந்தவர்களில் 7பேர் மேலாளர் கண் முன்னே எழுந்து தேநீர் விடுதிக்குச் சென்றார்கள். மேலாளருக்கு கோபம்.

அலுவலகப் பையனை அழைத்து அலுவலகக் கதவுகளை சாத்தச் சொல்லி வருகை ஏட்டில் கையொப்பமிட்டவர்களில் இருக்கையில் இல்லாதவர்களுக்கு குற்றப்பத்திரிகை கொடுக்கச் சொன்னார். நான் எச்சரிக்கை செய்துவிட்டு விடும்படி கூறினேன். அதிகாரி குற்றப் பத்திரிகை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொடுப்பதில் கண்டிப்பாக இருந்தார். அலவலகத்துக்குள் இல்லாதவர்கள் பெயர்கள் இடத்தில் வருகை ஏட்டில் சிவப்பு குறிபோட்டுவிட்டார்.

வருகை ஏட்டில் கையொப்பமிட்டவர்களில் மூன்றில் ஒரு பாகத்தினருக்கு குற்றப்பத்திரிகை கொடுக்கப்பட்டது. இன்று அனைவரும் சேர்ந்துகொண்டு ஒட்டுமொத்தமாக உள்ளிருப்பு வேலை நிறுத்தம் செய்கிறார்கள். அலுவல் எப்படி நடக்கும்? நாடே குட்டிச் சுவராப் போச்சு." நொந்துகொண்டார் கண்காணிப்பாளர்.

கண்காணிப்பாளர் சொன்ன விவரத்தை வைத்து அலுவலகத்தில் வேலை பார்ப்போரின் மொத்த எண்ணிக்கை, அவசர விடுப்பிலிருந்தோர், வருகை ஏட்டில் கையெழுத்திட்டோர், குற்றத்தாள் பெற்றவர்கள் ஆகியோரின் எண்ணிக்கையை கணக்கர் தெரிந்து கொண்டார். உங்களுக்கு தெரிகிறதா?

## 4. நாற்காலி விற்பனை

திரு.கணக்கரின் மாணவன் ஒருவர் தொழிற்பயிற்சி கூடத்தில் தச்சு வேலை கற்று சொந்தமாகத் தொழில் செய்துவந்தார்.

மரச்சாமான்கள் விதவிதமாகச் செய்து நாளுக்கு ஒன்று சந்திகளில் போட்டு விற்பது தொழில்.

ஒரு நாள் சந்தைப் பக்கம் வந்த கணக்கர் அந்த மாணவரைப் பார்த்து,

"தம்பி, வியாபாரம் இன்று எப்படி?" என்று விசாரித்தார்.

"ஐயா, இன்று 10 நாற்காலிகள் செய்து கொண்டு வந்தேன். 9 விற்றாகிவிட்டது."

"அப்படியானால் நல்ல விற்பனைதானே?"

இது கணக்கரின் கேள்வி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"இந்த 9 நாற்காலிகளை விற்றதில் மரம், ஆணி வாங்கப் போட்ட முதல்தான் கிடைத்திருக்கிறது. மீதமுள்ள இந்த ஒரு நாற்காலியையும் விற்று கிடைக்கும் பணம்தான் என் உழைப்புக்குரிய ஊதியம்" என்றான்.

"அதே விலைக்கு இந்த நாற்காலியும் விற்றுவிடுமா?"

"நிச்சயமாக விற்றுப் போகும். இப்போ மதியம் 2 மணிதானே ஆகிறது." என்று உறுதியாய் பதில் சொன்னான்.

மாணவன் எத்தனை சதவீதம் லாபம் வைத்து விற்கிறான் என்று கணக்கர் தெரிந்து கொண்டார். உங்களுக்க தெரிகிறதா?

## 5. பேரக்குழந்தைகள் எத்தனை?

திரு.கணக்கரின் 70ம் ஆண்டு பிறந்தநாளுக்க குடும்பத்தினர் அனைவரும் வந்திருந்தனர்.

பேரப் பிள்ளைகளுக்கு சாக்லேட் வாங்கி வந்திருந்தார் கணக்கர்.

எனக்கு அதிகம் வேண்டுமென்று ஒவ்வொரு பேரனும் பேத்தியும் முண்டியடித்துக்கொண்டு வந்தார்கள்.

கணக்கர் அவர்களைப் வயதுப் பிரகாரம் வரிசையாக உட்கார வைத்து முதல் பேரனை அழைத்து,

"உனக்கு ஒரு சாக்லேட் எடுத்துக்கொண்டு மீதம் உள்ள சாக்லேட்டில் பத்தில் ஒரு பாகத்தையும் எடுத்துக் கொள்" என்றார்.

அவன் அப்படியே எடுத்துக் கொண்டான்.

இரண்டாவது பேரப்பிள்ளையை அழைத்து,

"நீ 2 சாக்லேட்டுகளை எடுத்துக் கொண்டு மீதம் உள்ள சாக்லேட்டில் 1/10 பாகம் எடுத்துக் கொள்" என்றார்.

அவனும் அவ்வாறே செய்தான். அப்படியே மூன்றாவது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பேரப்பிள்ளையை 3 எடுத்துக் கொண்டு மீதமுள்ளதில் 1/10 பாகம் எடுத்துக் கொள் என்றும், 4வது, 5வது இப்படி எல்லா பேரக் குழந்தைகளையும் முறையே 4,5 என்று வரிசையாக சாக்லேட்டுகளை எடுத்துக் கொண்டு மீதமுள்ளவற்றில் 1/10 பாகம் எடுத்துக் கொள்ளச் சொன்னார்.

கடைசிப் பேரன் மீதமுள்ள சாக்லேட்டுகளை அவன் வரிசை எண்படியே எடுத்துக் கொண்டான். பங்கு வைத்து 1.˙.10 பாகம் எடுக்க சாக்லேட்டுகள் இல்லை. ஆனால் அனைவருக்கும் சாக்லேட்டுகள் சமமாகவே கிடைத்தது.

கணக்கர் வாங்கி வந்த சாக்லேட்டுகள் எத்தனை? ஒவ்வொருவருக்கும் கிடைத்த சாக்லேட்டுகள் எத்தனை? பேரக் குழந்தைகள் மொத்தம் எத்தனை பேர்? கண்டுபிடியுங்கள்.

## 6. குழந்தையின் வயது

திரு.கணக்கரைப் பார்க்க அவரது தம்பி மகள் ஜாக்குலினும், மருமகனும் குழந்தையோடு வந்திருந்தார்கள்.

திருமணமாகி கணவர் வேலை பார்க்கும் ஓசூருக்குப் போனவள் ஏழாண்டுகளுக்குப் பிறகு பாளையங்கோட்டைக்கு வந்திருந்தாள்.

கணக்கர் பேசிக் கொண்டிருந்த போது “குழந்தையின் வயது என்ன?” என்று கேட்டார்.

ஜாக்குலின் சிரித்துக் கொண்டே, “எங்கள் திருமணத்தின் போது எங்கள் இருவரின் சராசரி வயது 24 ஆக இருந்தது. திருமணமாகி 7 ஆண்டுகள் முடிந்துவிட்டன.

இப்பொழுது குழந்தையையும் சேர்த்து எங்கள் மூவரின் சராசரி வயது 22 ஆகக் குறைந்துள்ளது. நீங்கள் தான் குழந்தையின் வயதை எளிதில் கண்டுபிடித்துக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளுவீர்களே" என்று புதிர் கணக்குப் போட்டாள்.

குழந்தையின் வயதை கணக்கர் எளிதில் கண்டுபிடித்து விட்டார். உங்களால் கண்டு பிடிக்க முடிகிறதா?

## 7. மணியின் புத்திக்கூர்மை

திரு.கணக்கர் அவர் வீட்டுக் கொல்லையில் தென்னங்கன்றுகள் வைக்க விரும்பினார். வழக்கமாக அவர் வீட்டில் எடுபிடி வேலைகளைச் செய்யும் முத்துவிடம் சொன்னார்.

அவர் "ஐயா, நானே நாலுகுழிகளையும் வெட்டித் தந்திடுகிறேன். ரூ100 கொடுத்திடுங்க" என்றார்.

கணக்கரும் நியாயமாய்த் தான் கேட்கிறார் என்று "சரி" என்றார்.

மறுநாள் காலையில் 6 மணிக்கே மண்வெட்டி, கூடை, கடப்பாரையோடு வந்தார் முத்து. அவரோடு அவர் பையன் மணியையும் அழைத்து வந்திருந்தார்.

குழி வெட்டும் வேலையை காலை 6மணிக்கே தொடங்கியவர்கள் 12.40க்கே முடித்துவிட்டு கணக்கரிடம் பணம் வாங்க வந்தார்கள்.

"என்ன, வேலையை சீக்கிரம் முடிச்சிட்டீங்களே...!" என்று ஆச்சரியப்பட்டார் கணக்கர்.

"ஐயா, நான் தனியா குழிகளைத் தோண்டியிருந்தால், 4 குழிகளையும் தோண்டி முடிக்க 6மணியிலிருந்து மாலை 6மணிவரை ஆகியிருக்கும். இன்றைக்கு மகன் மணிக்கு பள்ளி விடுமுறை. அதனாலே அவனையும் அழைத்து வந்தேன். அவனும் சேர்ந்து வேலை செய்ததாலே சீக்கிரமா முடிஞ்சு போச்சு" என்றார் முத்து.

"மணி, எந்த வகுப்பு படிக்கிறாய்?" விசாரித்தார் கணக்கர்.

"நான் பத்தாம் வகுப்ப படிக்கிறேன்."



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

“மணி நீ தனிமையாய் இந்த வேலையைச் செய்தால் 4 குழிகளையும் தோண்டி முடிக்க எத்தனை மணி நேரமாகும். கணக்குப் போட்டு சொல்லு பார்ப்போம்.”

தரையிலே காலால் கிறுக்கிக் கொண்டிருந்தவன் சில நிமிடங்களிலேயே, எத்தனை மணி நேரமாகுமென்று சரியாய் சொல்லிவிட்டான்.

கணக்கருக்கு அளவற்ற மகிழ்ச்சி. மணியை பாராட்டி கணக்கர், முத்துவிடம் “மணியை எந்த கஷ்டப்பட்டும் காலேஜில் சேர்த்து விடு. நல்ல புத்திக் கூர்மையுள்ளவன். அவன் படிப்புக்கு பணம் தேவைப்பட்டால் நான் உதவுகிறேன்” என்றார்.

ரூ.100 கூலி பேசிய கணக்கர், முத்துவிடம் ரூபாய் 100யும், மணிக்கு அன்பளிப்பாக ரூ20 யையும் கொடுத்து மகிழ்ந்தார்.

மணி தனியாக அந்த 4 குழிகளையும் தோண்டினால் எத்தனை மணி நேரம் ஆகியிருக்கும்? உங்களுக்கு தெரிந்தால் கூறுங்களேன்.

## 8 வங்கித் தேர்வு

திரு.கணக்கரின் பக்கத்துவீட்டு பரமசிவத்தின் மகன் ஆறுமுகம் வங்கி வேலைக்குத் தேர்வு எழுதப்போக வேண்டியதிருந்தது.

பரமசிவம் அவர் மகனிடம் “தேர்வு எழுதப் போகுமுன் கணக்கரைப் பார்த்து ஆலோசனை பெற்றுச்செல்” என்றார்.

ஆறுமுகம் கணக்கரை பார்க்கச் சென்றான்.

“மாமா, நாளைக்கு வங்கி வேலைக்கு தேர்வு எழுதப் போகிறேன். உங்களிடம் ஆலோசனை பெற்றுப்போக வந்தேன்“ என்று பவ்வியமாக கூறினான்.

“அப்பா, உன்னை அனுப்பியிருப்பார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று நினைக்கிறேன். உன் மாதிரி வினாத் தாளையும், அடையாள அட்டையையும் காட்டு" என்று கேட்டு வாங்கிப் பார்த்தார்.

"அடையாள அட்டையை மறக்காமல் எடுத்துச் செல், இரண்டு பேனா, ஒரு பென்சில், பிளேடு, அழிப்பான் எல்லாம் கொண்டுபோ, தேர்வு எழுதும் அறைக்கு அரைமணி நேரம் முன்கூட்டியே சென்று, உன் வரிசை எண்ணை சரிபார்த்து நீ உட்கார வேண்டிய இடத்தை உறுதி செய்துகொள். தைரியமாக எழுது. எல்லாக் கேள்விகளும் எளிதாக இருக்கும்" என்று உற்சாகப்படுத்தியதோடு,

"உனக்கு 200 கேள்விகள் கொடுக்கப்பட்டிருக்கும். அவைகளை 200 நிமிடங்களில் செய்து முடிக்கவேண்டும். 150 ஆங்கிலம் மற்றும் பொது அறிவுக் கேள்விகள். கடைசி 50 கணக்கு கேள்விகள். ஒரு கேள்விக்கு 1 நிமிடம் எடுத்துக் கொள்ளலாம் என்று நினைத்திருப்பாய், அப்படித்தானே?" கேட்டார் கணக்கர்.

"ஆம்" என்றான் ஆறுமுகம்.

"அப்படிச் செய்தால் கடைசியாய் 50கணக்குகளையும் முடிக்க நேரமிருக்காது. மற்ற கேள்விகள் ஒவ்வொன்றுக்கும் எடுக்கும் நேரத்தைவிட இரண்டுமடங்கு செலவிட வேண்டியது வரும். அதற்குத்தக்க யூகம் வகுத்து கேள்விகளுக்கு பதில் எழுது" என்று ஆலோசனை சொல்லி அனுப்பினார்.

ஆறுமுகமும் கணக்கர் சொன்ன ஆலோசனைப்படியே மற்ற கேள்விகள் ஒவ்வொன்றுக்கும் எடுக்கும் நேரத்தைவிட கணக்குகள் ஒவ்வொன்றுக்கும் இருமடங்கு நேரம் கிடைக்கும்படியாய் யோசனை செய்து கேள்விகள் அனைத்தையும் எழுதி முடித்தான்.

அப்படியானால் ஆறுமுகம் மற்ற கேள்விகள் ஒவ்வொன்றுக்கும் எடுத்த நேரம் எவ்வளவு? கணக்கு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கேள்விகள் ஒவ்வொன்றுக்கும் செலவிட்ட நேரம் எவ்வளவு? கண்டுபிடித்துக் கூறுங்கள்.

## 9. எத்தனை மாணவர்கள் தேவை?

பள்ளிக் கூடம் முடிந்து வந்த கணக்கரின் பேரன் ஜெசுரன்,

"தாத்தா, ஒரு கணக்கு செய்கிறீர்களா?" என்று கேட்டான்

"யார் சொன்ன கணக்கு? "

"எங்க வகுப்பு ஆசிரியர் போட்டார். நாளைக்கு சரியா செய்திட்டு போகிறவர்களுக்கு பரிசு உண்டு. எனக்கு சொல்லிக் கொடுங்க, தாத்தா" ஜெசுரன் கெஞ்சினான்.

"கணக்கை சொல்லு, பார்ப்போம்."

"10 மாணவர்கள் 10கிலோ பொட்டுக் கடலையை தின்ன 10மணிநேரம் எடுத்தால், 100கிலோ பொட்டுக் கடலையை 100மணி நேரத்தில் தின்று முடிக்க எத்தனை மாணவர்கள் வேண்டும்? இதுதான் கணக்கு" என்றான் ஜெசுரன்.

"இது சின்னக் கணக்கு, நான் சொல்லித் தரமாட்டேன். நீயே செய்து விடையைச் சொல்லி உன் ஆசிரியரிடம் பரிசைப் பெற்றுக் கொள்" என்று சொல்லிவிட்டார் கணக்கர்.

ஜெசுரன் தானே முயற்சி செய்து கணக்கைச் செய்து விடையைக் கூறி பரிசும் பெற்று வந்தான்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சாரணியத் தந்தை
## ஸ்மித் பேர்ட்ன் (B)பவல்

'எப்பொழுதும் உதவி செய்ய ஆயத்தமாயிரு' என்ற தாரக மந்திரத்தை அடிப்படையாகக் கொண்டு ஆக்கப்பட்ட சாரணர் இயக்கத்தை ஆரம்பித்து அறிமுகப்படுத்தியவர் லோர்ட் ரொபர்ட் ஸ்டீபன்சன் ஸ்மித் பேர்ட்ன் பவல் என்பவராகும்.

இவர் 22.02.1857இல் பிறந்தார். இவரது தந்தையாராகிய H.G.பேர்ட்ன் பவல், லண்டனிலுள்ள ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் பேராசிரியராகப் பணிபுரிந்தார். பிரித்தானிய கடற்படைத் தளபதியாகப் பணியாற்றிய அட்மிரல் W.D.ஸ்மித் என்பவரின் மகளே இவரது அன்னையர். பேர்ட்ன் பவலுக்கு மூன்று வயதாய் இருக்கும்பொழுது தந்தையார் இறந்தவிட்டார்.

பேர்ட்ன் பவல் 1840இல் லண்டனிலுள்ள சாட்டர் ஹவுஸ் என்னும் பாடசாலையில் சேர்க்கப்பட்டார். இளமையிலேயே மிகவும் சுறுசுறுப்பானவராகக் காணப்பட்ட இவர் பாடசாலை உதைப்பந்தாட்டக் குழுவிலும், இசை வாத்தியக் குழுவிலும் அங்கத்தவராக இருந்தார். 1876இல் இராணுவத்தில் சேர்ந்து பணிபுரிந்து கொண்டிருந்த சமயம் இந்தியா செல்ல நேரிட்டது. அங்கே சேவையாற்றிய காலகட்டத்தில் கப்டன் பதவி இவருக்குக் கிடைத்தது. 1887இல் ஆபிரிக்கப் பயங்கரவாதிகளுடன் போரிட்டு வெற்றிப் பாதையில் சென்றவேளை இவரது போர்ச் சாதுர்யம் காரணமாக உறங்காச் சிங்கம் என்ற பெயர் இவருக்குக் கிடைத்தது.

1889இல் கேர்ணல் ஆக பதவி உயர்த்தப்பட்டார். அப்போது நடைபெற்ற ஒரு போரில் 217 நாட்கள் போரிட்டு 'மப்கின்' நகரைக் கைப்பற்றியதால் பிரித்தானிய மன்னர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவருக்கு ஜெனரல் பதவி அளித்து கௌரவித்தார். பேர்ட்ன் பவல் 'படைவீரர்களுடன் இருப்பதைவிட சிறுவர்களுடன் இருப்பதே சிறந்தது' என உணர்ந்து படையிலிருந்து விலகினார். 1907ஆம் ஆண்டு சாரணியம் தோற்றுவிக்கப்பட்டு பிரவுண்ஸ் தீவில் 20 சாரணர்களைக் கொண்ட ஒரு கூடாரம் நிறுவப்பட்டது. 1908இல் சாரணியமும் விஞ்ஞானமும் என்ற நூலை வெளியிட்டார். அதைத் தொடர்ந்து சாரணர் இயக்கம் உலகெங்கும் பரவத் தொடங்கியது.

இவர் ஒலேஸ் சோம்ஸ் என்ற பெண்ணைத் திருமணம் செய்தார். இருவரும் இணைந்து சாரணர் இயக்க வளர்ச்சிக்காக அரும்பணியாற்றினர். 1920 ஆகஸ்ட் முதல் வாரத்தில் லண்டனில் நடைபெற்ற முதலாவது உலக சாரணர் மகா நாட்டில் பேர்ட்ன் பவலுக்கு உலக பிரதம சாரணர் என்ற விருது வழங்கப்பட்டது. அதைத் தொடர்ந்து பேர்ட்ன் பவல் உலக சாரணர்களுக்குத் தலைவராக விளங்கினார்.

அதன் பின்னர் 'ஒலிவ் சிங்க்லேயர்' என்பவருடன் இணைந்து பெண் சாரணியத்தை அறிமுகப்படுத்தினார். முதலாவது பிரதம பெண் சாரணியாக அவருடைய சகோதரியான அட்னஸ் பேர்ட்ன் பவல் அறிமுகப்படுத்தப்பட்டார். ஆண்கள் அணி SCOUTS எனவும் பெண்கள் அணி GIRLS GUIDE எனவும் அழைக்கப்பட்டது. அட்னஸ் பேர்ட்ன் பவலே பெண்கள் அணித் தலைவியாக நியமிக்கப்பட்டார்.

1929இல் பேர்ட்ன் பவலுக்கு பிரபு (டுழசன) பட்டம் வழங்கப்பட்டது. இவர் 08.01.1941இல் கென்யாவில் இயற்கை எய்தினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இந்துவின் மரணமும்! பெரும் செலவும்!

மரணவீட்டில் நடந்த கிரியைகளைக் கருத்தில் கொண்டு தந்தையிடம் மகன் கேள்வியைக் கேட்கின்றான். தந்தைக்கும் கிரியைகள் ஏன் செய்ய வேண்டும் எதற்காகச் செய்யப்படவேண்டும்? மகன் சொல்வது போல் இவை ஒன்றும் செய்யத்தேவையில்லை என்று யோசிக்கின்றார். பற்பல கேள்விகளும் அவருக்குள் எழுகின்றது. அச்சமயம் அவர்களிடம் இராமநாதன் சத்தியமூர்த்தி குருக்கள் (கொட்டகலை மகாவிஷ்ணு ஜோதி. ஆலய சிவாச்சாரியார்) வருகின்றார். அவரிடம் இந்தக் கேள்விகள் கேட்கப்படுகின்றன. அதற்கு அவர் விரிவாகவும் விளக்கமாகவும் பதில் அளிக்கிறார்.

ஒரு மரணவீட்டிற்கு ஆச்சாரியாரை அழைத்துத்தான் கிரியைகள் செய்யப்படவேண்டும். ஏன் எனில் இறந்தவருடைய ஆத்மா அங்கேயே உலாவிக் கொண்டிருக்கும் முறைப்படி கிரியைகளைக் கற்ற ஆச்சாரியார் வந்து மந்திரங்களை உச்சரித்து முறைப்படி கிரியைகளைச் செய்கிறார். இவ்வாறு செய்வதனால் அந்த ஆத்மா திருப்தி அடைகின்றது. பின்னர் அது அவ்விடத்தை விட்டு நீங்குகின்றது. உதாரணமாக ஒருவர் இறந்தால் அவரை முதலில் வாயையும் பெருவிரல் இரண்டையும் கட்டி தெற்கு நோக்கி வெள்ளைத் துணியில் கிடக்க வைக்கவேண்டும். மேலும் வெள்ளைத்துணி விரிக்க வேண்டும். பின்னர் காதில் மூக்கில் பஞ்சு அடைதல் வேண்டும். ஒரு பிள்ளையின் பெற்றோர் இறந்தால் அந்த நேரத்தில் பிள்ளை தன் தொடையில் பெற்றோரை வைத்து இராம நாமம் அல்லது சிவாய நாமம் அல்லது பஞ்சாட்சர மந்திரம் காதில் சொல்ல வேண்டுமாம். அவ்வாறு சொல்லி வாயில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலை ஊற்றினால் அந்தப் பால் அபான வாயுவால் உறிஞ்சப்பட்டு வயிற்றைச் சென்றடையும். அதனால் ஆத்மா இலகுவாகப் பிரிந்தவிடும் என்று கூறப்படுகிறது. ஆனால் சிலருக்கு இவ்வாறான முறைகள் தெரியாது. அதனால் அவர்கள் ஆச்சாரியாரை அழைக்காமல், கிரியைகள் செய்யாமல் தங்கள் பாட்டிற்கு ஏதோ செய்து தகனம் செய்வார்கள். இதனால் தான் அவர்கள் மனநிம்மதியற்ற நிலையையும், பலவிதமான இன்னல்களையும் அனுபவிக்கின்றார்கள். ஆகவே முறைப்படி கிரியைகள் செய்தால் இவ்வாறான இன்னல்களை அனுபவிக்கத் தேவையில்லை என்று சொன்னார்.

குறிப்பாக இந்துவின் மரணவீட்டில் கிரியைகள் ஒருபக்கம் நடைபெறும் மறுபக்கம் சிலர் கதைத்துக் கொண்டிருப்பார்கள். சிரார்த்தம் என்பது சிரத்தையுடன் செய்யப்படல் வேண்டும். பெற்றோர் இறந்தால் பிள்ளைகள் அதில் கண்ணும் கருத்தாகத்தான் இருப்பார்கள். ஏனெனில் அவர்கள் துக்கத்தில் காணப்படுவர். நெருங்கிய உறவினரும் அதில் ஈடுபாடு உடையவர்களாக இருப்பார்கள். சிலர் பார்த்துக் கொண்டிருப்பவர்கள் அசட்டையாக இருப்பார்கள். அது ஒவ்வொருவருடைய மனநிலையைப் பொறுத்தது. முறைப்படி அந்த ஆத்மா சாந்தியடைய வேண்டுமானால் எல்லோரும் பிரார்த்திப்பது தான் அவர்களுடைய முக்கிய கடமை ஆகும் என்றார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மனையடி சாஸ்திரம்

## வீடு கட்டும் அடி அளவின் பயன்கள்

உலகில் மக்கள் வாழ்வதற்கு மனை கூடம் அவசியம். அவர்கள் ஐந்து அடிக்கு மேலே வளர்வதன் காரணமாக 5 அடிக்குள் மனைகூடம் அமைப்பது பொருத்தமற்றதால் ஆற அடி தொடக்கம் 100 அடிவரையுள்ள பலன்கள் தரப்பட்டுள்ளன.

6அடி - நன்மை உண்டாகும்
7அடி - தீமை ஏற்படும்
8அடி - ராஜயோகம் உண்டு
9அடி - நோயினால் நலிவு
10அடி - அறுசுவை உண்டி கிடைக்கும்
11அடி - நன்மைகள் விளையும்
12அடி - மக்கள் மரணம் அடைவார்கள்
13அடி - நோயினால் வேதனை
14அடி - கவலை வாட்டும்
15அடி - துன்பம் நேரிடும்
16அடி - செல்வம் சேரும்
17அடி - எதிரிகள் அழிவர்
18அடி - வீடு பாழாகும்
19அடி - வறுமை, மக்கட்பேறு இல்லை
20அடி -சுகபோகம் ஏற்படும்
21அடி - நன்மை ஏற்படும்
22அடி -சத்துருக்கள் ஒழிவர்
23அடி -தீமை உண்டாகும்
24அடி -லாப-நஷ்டம் சமமாக இருக்கும்
25அடி -மனைவி மரணம் அடைவாள்
26அடி -செல்வ விருத்தி ஏற்படும்
27அடி - பொன் பொருள் சேர்க்கை
28அடி -தெய்வீக அருள் கிடைக்கும்
29அடி - பசு பாக்கியம்
30அடி -திருமகள் வாசஞ்செய்வாள்
31அடி - நன்மையுண்டு
32அடி -இழந்ததைப் பெறலாம்
33அடி - நன்மைகள் பல உண்டு
34அடி - வேறு இடத்திற்கு மாற்றம்
35அடி - லக்ஷ்மி கடாட்சம்
36அடி - வலிமை ஏற்படும்
37அடி - கால்நடை வளர்ச்சி
38அடி - வறுமை வாட்டும்
39அடி - நலம் பொருந்திய வாழ்வு
40அடி - பகை ஏற்படும்
41அடி - செல்வந்தர் ஆகலாம்
42அடி - அஷ்டலக்ஷ்மி அருளுண்டு
43அடி - நன்மை இல்லை
44அடி - பார்வை இழக்க நேரிடும்
45அடி - புத்திர செல்வம் மிகுதி
46அடி - பூமி, கால்நடைகள் நஷ்டம்
47அடி - வேற்றுமனை செல்லல்
48அடி - நெருப்பினால் ஆபத்து
49அடி - உரியவருக்குத் தீமை
50அடி - நன்மையே இல்லை
51அடி - வீம்பு வழக்கு
52அடி - தானிய விருத்தி
53அடி - பெண்ணால் நஷ்டம்
54அடி - அரசாங்கத்தால் ஆபத்து
55அடி - உறவினர் எதிர்ப்பு



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

56அடி - புத்திரப்பேறு உண்டு
57அடி - சந்ததி இருக்காது
58அடி - மரணம் நேரிடும்
59அடி - கவலை மிகுதி
60அடி - வியாபார வீழ்ச்சி
61அடி - கலகம் வீம்பு உண்டாகும்
62அடி - வறுமையால் வாடுதல்
63அடி - எதிரிகளை வெற்றி காணல்
64அடி - நன்மை மிகுதி
65அடி - மனைவியின் மரணம்
66அடி - மக்கட்பேறு உண்டு
67அடி - பேய் பிசாசு பயம்
68அடி - புதையல் கிடைக்கும்
69அடி - நெருப்பினால் ஆபத்து
70அடி - பெருமையுண்டு
71அடி - அரசாங்க ஆதரவு
72அடி - செல்வச் செழிப்பு
73அடி - வாசியோகம்
74அடி - பிரபலயோகம்
75அடி - மரணம் உண்டாகும்
76அடி - மக்களை இழத்தல்
77அடி - வாகன யோகம்
78அடி - புத்திரபாக்கியம் இல்லை
79அடி - கால் நடைவளர்ச்சி
80அடி - திருமகள் வாசம்
81அடி - தலைவருக்குத் தீங்கு
82அடி - இடியினால் ஆபத்து
83அடி - மரணம் நேரிடும்
84அடி - மகிழ்ச்சியான வாழ்வு
85அடி - இந்திர யோகம்
86அடி - தீமை உண்டாகும்
87அடி - வாகன யோகம்
88அடி - நன்மை உண்டு
89அடி - பலவீடுகள் கட்டலாம்
90அடி - அளவற்ற செல்வம்
91அடி - புலமையால் பெருமை
92அடி - சகல செல்வமும் உண்டு
93அடி - இடம் மாற்றம் ஏற்படும்
94அடி - வேறு வீட்டுக்குச் செல்லுதல்
95அடி - செல்வம் கிடைக்கும்
96அடி - தீமை. இடம்பெயர்தல்
97அடி - ஏற்றுமதி. வியாபாரம் உண்டு
98அடி - வேறு ஊர்சென்று பெருமை கிட்டுதல்
99அடி - அரசாங்க ஆதரவு
100அடி- நன்மை ஏற்படும்.

**பிறர் உணர்ச்சியைப் புண்படுத்துமாறு பேசுவதை நிறுத்திக் கொண்டேன்**
**பிறரை நேரிடையாக மறுத்துப் பேசுவதையும் நிறுத்திக் கொண்டேன்**
**இவையே நான் கற்றுக்கொண்ட பாடங்கள்**
**– பெஞ்சமின் பிராங்களின் –**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீர் அஞ்சலி



## திருமதி. இராசமணி தில்லைநடராஜா

※ ஊருக்கொரு தாயே.................
யாருக்குப் பரிசாய் விண்ணகம் சென்றனையோ!
பாருக்குப் பரிசாய்ப் பட்டங்கள் பல அளித்து - விழி
நீருக்குப் பரிசாய்ப் பிள்ளைகளைக் கொடுத்தனையோ!

※ " ராஜமணி" முடிதரித்து நீர் ஆண்டமலை
அழகுரலை எதிரொலிக்க
குலவிளக்கே!
குத்துவிளக்கிடையே தூங்கும் சபதமேனோ?

※ எண்ணும் எழுத்தும் எம் கண்ணெனச் சொல்லிவிட்டு
கண்மூடி நீர் துயிலும் காரணம்
பெண்ணிருவர் உம்பணி தொடர்வாரென்றோ?
கண்ணெனவே ஊர் பேணும் அவர்களையும்
கலங்காதே தாயே! போய் வாரீர்!

※ அன்பின் இலக்கணமே! - நீர்
மண்மகிழச் செய்த சேவை - எண்ணி
மனம் நெகிழும் வேளையிலே தேம்பியழச் செய்து
விண் புகழ் சேவைக்காய் விரைந்தனையோ!


※ ஆசு நீக்கிய அன்னையே!.....
பேசும் இனி உம் புகழை ஊரும் பாடும்
விட்டபணி தொடர நளாயினி சிவரஞ்சியிருக்க
ஆத்துமம் சாந்தி பெற அன்னையே போய்வாரீர்!
கண்ணீர் ஆற்றிலோடி பேரின்பக் கடலைநாடி
பேறான வீட்டிலே நிலையான துயில் கொள் தாயே!

**துயரில் பங்குகொண்டு ஆத்மசாந்திக்காய் பிரார்த்திக்கின்றோம்**

தி/உவர்மலை விவேகானந்தா கல்லூரி
அதிபர், ஆசிரியர்கள்,ஊழியர்கள், மாணவர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குடும்ப விருட்சம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

எங்கள் பாசத் திருவுருவான
அமரர் திருமதி இராசமணி தில்லைநடராசா
அவர்களின் இறுதிக்கிரியைகளில் கலந்து
கொண்டோர், இரங்கல் செய்திகள்
கடிதங்கள், மற்றும் தொலைத்தொடர்பு
மூலம் அனுதாபம் தெரிவித்தோர்,
மலர்வளையங்கள் சமர்ப்பித்தோர்,
அந்தியேட்டிக் கிரியைகளில் கலந்து
கொண்டோர், உணவு வழங்கி உபசரித்தோர்,
மலரை வெளியிட அச்சிட்டுத்தந்த அஸ்ரா
பிறிண்டர்ஸ் நிறுவனத்தினர் மற்றும் சகல
வழிகளிலும் உதவியோர் அனைவருக்கும்
எமது மனமார்ந்த நன்றியைத்
தெரிவித்துக்கொள்கின்றோம்.

அன்பு பிள்ளைகள்
மருமக்கள், பேரப்பிள்ளைகள்

52, மத்தியவீதி
உவர்மலை
திருகோணமலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org